தமிழ் நாடா திராவிட நாடா



R.T. ARASU

கி. வீரமணி M.A.B.L

தமிழ் நாடா?
திராவிட நாடா?

(கொள்கை விளக்கம்)

கி. வீரமணி எம். ஏ. பி. எல்.

குடியரசுப் பதிப்பகம்
ஈரோடு.

விலை 20 புது காசுகள்

முன்னுரை

திராவிடநாடு கேட்ட தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாடு கேட்பது கொள்கையில் கொண்டுள்ள ஆழ்ந்த பற்று காரணமாகவும், இலட்சியத்தை அடைவதில் உள்ள உண்மையான வேட்கையாலும் தான் என்பதை கடந்த சில ஆண்டுகளாக பெரியார் அவர்களே தமிழ்நாடு முழுவதிலும் விளக்கிவந்துள்ளார்கள். அவ்வரிய கருத்துரைகளை தொகுப்பு நிலையில் இவ்வெளியீடு தருகிறது.

தெளிவற்றோர் தெளிவடைந்து, திசைமாறிச் செல்லாமல் சரியான பாதைக்கு வந்து **சுதந்தரத் தமிழ்நாடு** பெறப் பாடுபடவேண்டும் என்பதுதான் இச்சிறு வெளியீட்டின் குறிக்கோள் ஆகும்.

திறந்த மனத்தோடு திராவிடநாடு பிரச்னையை அணுகும் எவரும் ஈரோட்டுப் பாதைக்கே வருவர் என்பது உறுதி!

கொள்கைக் குழப்பவாதிகள் தெளிவடைவார்களா?

4-8-61. **கி. வீரமணி**

ஐய்ய வினாவுக்கு விளக்கம்

கேள்வி:-

"திராவிடநாடு பிரிய வேண்டுமென இதுவரை கூறி வந்த பெரியாரும் திராவிடர் கழகமும், 'திராவிட நாடு தேவையில்லை; தமிழ்நாடு தான் வேண்டும்' என்று கேட்கிறார்களே இது முன்னுக்குப்பின் முரணானதல்லவா?"

பதில்:-

இந்த கேள்வி கடந்த சில ஆண்டுகளாகவே எழுப்பப்பட்டு நாடு, நகரங்கள், பட்டி தொட்டிகள், கிராமங்கள் எல்லா இடங்களிலும் தந்தை பெரியார் அவர்களும், திராவிடர் கழகத் தோழர்களும், திராவிடர் கழகத்தின் அதிகாரபூர்வமான "விடுதலை" ஏடும், சிறந்த விளக்கம் தரும்வகையில் பதில் தந்து வந்துள்ளனர். சந்தேகமுற்று இவ்வினாவை எழுப்பியவர்களுக்கு அந்த ஐய்யத்தைத் தீர்க்கும்வகையில்-கொஞ்சங்கூட குழப்பத்திற்கேஇடம் இல்லாத வகையில்—விளக்கி வருவதால் அத்தகைய சந்தேகவாதிகளுக்கு திராவிட நாட்டுப் பிரச்னையிலிருந்து மாறி ஏன் தமிழ்நாடுதான் தேவை என்று கூறிவருகிறார்கள் என்பது நல்ல வண்ணம் புரிந்து வருகிறது.

ஆனால் இக்கேள்வியை எழுப்புபவர்கள் பலர், இதைக்கூறி, மக்கள் மனதில், திராவிடர் கழகத்தைப் பற்றியும் அதன் தனிப்பெரும் தலைவர் தந்தை பெரியார் அவர்களைப் பற்றியும் ஒருவித குழப்பத்தை ஏற்படுத்தி, அத்தகைய குழம்பிய குட்டையில் தங்களுக்கு ஏதாவது

சிறு மீன், பெரு மீன் எதாவது கிடைக்காதா என்றெண்ணும் ஏக்கவாதிகள்தான்! இது எப்படியிருந்த போதிலும் கூட, இம்மாற்றத்தின் விளக்கத்தினை சரிவர உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இவ்விளக்கம் இந்தப் பிரச்னையைப்பற்றி உண்மையான நாணயமான கவலை உள்ளவர்களுக்கேயாகும்.

தனிநாட்டுப் பிரச்னை தோற்றம்

நாடு பிரிய வேண்டும், என்ற கருத்தை முதன் முதல் 1937-39ல் ஆச்சாரியார் மந்திரிசபை அமைத்து இந்தியைக் கட்டாயபாடமாக்கித் திணித்த நிலையில் தான் தந்தை பெரியார் அவர்கள் இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமா? என்ற குரலெழுப்பி "**தமிழ் நாடு தமிழருக்கே**" என்ற லட்சிய முழக்கத்தை எழுப்பினார்.

அப்போது தமிழ் நாடு இன்றைக்கு இருப்பதுபோல் தனித்த (ஒரு சிறு மலையாளப்பகுதி, ஒரு சிறு ஆந்திரப் பகுதி, ஒருசிறு கன்னடப்பகுதி நீங்கலான) நாடாக இல்லை. **அப்போது தமிழ் நாடு டெல்லி ஆதிக்கத்திலும் இல்லாமல் பிரியவேண்டும்** என்று சொன்னது அன்றைய சென்னை ராஜதானியைத்தான். (Madras Presidency)

தமிழ்நாடு தமிழருக்கே என்று முழக்கம் எழுப்பினதில், "சென்னை ராஜதானியில் உள்ள மலையாளிகளும், கன்னடியர்களும், தெலுங்கர்களும், ஆகிய எங்கள் நிலை என்னாவது" என்று கேட்டதனால் தான் உடனே **தமிழ்நாடு தமிழருக்கே** என்ற

முழக்கமானது திராவிடநாடு திராவிடருக்கே என்று மாறியது.

திராவிட நாடு பிரிய வேண்டும் என்ற தீர்மானம், தீர்மான வடிவில் முதல் முதலில் நிறைவேற்றப்பட்டது திருவாரூர் மாநாட்டிலேயாகும். 1940ல் 4-8-1940ல் திருவாரூரில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடைபெற்ற தென்னிந்திய நலவுரிமைச்சங்க மாநாட்டில் (S. I. L. F.) நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாசகம் இதோ:-

"திராவிடர்களுடைய கலை; நாகரீகம் பொருளாதாரம் ஆகியவைகள் முன்னேற்றம் அடைவதற்கு, பாதுகாப்பதற்கு **திராவிடர்களின் அகமாகிய சென்னை மாகாணம்** இந்தியா மந்திரியின் நேர்ப்பார்வையின் கீழ் ஒருதனி நாடாகப் பிரிக்கப்பட வேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

அதற்காக வேண்டிய திட்டங்கள் வகுக்க, 1. பெரியார் ஈ. வெ.ராமசாமி,தோழர்கள் 2. முனிகன்னையநாயுடு; 3. பி. இராமச்சந்திரரெட்டி; 4. குமாரராஜா முத்தைய செட்டியார், எம். எல். ஏ.; 5. ராவ் பகதூர் என். ஆர். சாமியப்பமுதலியார்; 6. திவான் பகதூர் மகாபலஹெக்டே; 7. பி. பாலசுப்ரமணிய முதலியார்; 8. சி. பாசுதேவ்; 9. கே. ஏ. பி. விசுவநாதம்; 10. ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் ஆகியவர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை நியமனம் செய்வதென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது."

நாட்டின் எல்லை

இத்தீர்மானத்தின் வாசகத்தில் முக்கியமான வாசகங்கள் **திராவிடர்களின் அகமாகிய சென்னை மாகாணம்** என்பதேயாகும். காரணம் திராவிட நாடு எது? என்ற கேள்விக்கு பதிலாகப் அது அமைந்துள்ளதோடு சென்னை மாகாணம்தான் பெரியார் அவர்கள் கோரிய திராவிடநாடு என்பதாகும்.

இது அந்த ஒரு மாநாட்டில் மட்டுமல்லாமல் அதற்குப்பிறகு ஜஸ்டிஸ்கட்சி திராவிடர் கழகமாக மாற்றப்பட்டு, பட்டம், பதவிக்காரர்கள் கையிலிருந்து பாமர மக்கள் கைக்கு வந்த நிலையிலுங் கூட இதே கருத்துதான் தந்தை பெரியார் அவர்களால் வலியுறுத்தப் பட்டு வந்தது.

உதாரணமாக, 27-8-44ல் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் **சேலத்தில்** நடைபெற்ற ஜஸ்டிஸ்கட்சி (S. I. L. F.) மாநாட்டில் நிறைவேற்றப் பட்ட இரண்டாவது தீர்மானம் இதோ:-

(ஆ) "அதன் முக்கிய கொள்கைகளில் **திராவிட நாடு என்ற பெயருடன் நம் சென்னை மாகாணம் மத்திய அரசாங்க ஆதிக்கம் இல்லாததும்** நேரே பிரிட்டிஷ் செக்ரடரி ஆஃப் ஸ்டேட்டின் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டதுமான ஒரு தனி (ஸ்டேட்) நாடாகப் பிரிக்கப்பட வேண்டியது என்ற கொள்கையை முதற்கொள்கையாக சேர்க்கப்பட்டிருக்கிறது என இந்த மாநாடு தீர்மானிக்கிறது."

இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மான வாசகங்களில் தந்தை பெரியார் கோரி வந்த திராவிட நாடு சென்னை மாகாணம்தான் என்பது தெளிவாக வில்லையா ?

1940ல் 'விடுதலை' நாளிதழில் திரு.சி.என்.அண்ணா துரை அவர்கள் (சம்பளம் பெற்ற) அதன் தலையங்க எழுத்தாளராக இருந்த நேரத்தில் எழுதிய தலையங்கங் கள் கொண்ட தொகுப்பு பிறகு குடியரசுப் பதிப்பக வெளியீடாகக்கூட அச்சிடப்பட்டு வெளிவந்தது. அதன் தலைப்பு "**தமிழ்நாடு தமிழருக்கே**" என்பதாகும். அத் தலைப்பின் கீழே (திராவிடநாடு திராவிடருக்கே) என்று பிராக்கெட்டிலும் கூட போடப்பட்டிருக்கும். தமிழ் நாடு தமிழருக்கே என்பதிலும் திராவிடநாடு திராவிட ருக்கே என்பதிலும் அதிக அளவில் வேறுபாடு இல்லை என்பதைத்தானே இது (இந்த பிராக்கெட்டு) காட்டு கிறது ?

அதன் பிறகு கூட 29-9-45ல் திருச்சி புத்தூர் மைதானத்தில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமை யில் கூடிய 17 வது திராவிடர் கழக மாகாண மாநாட் டில் நிறைவேறிய முதல் தீர்மானம் இதோ:-

1. (a) "திராவிடநாடு (**சென்னை மாகாணம்**) சமுதாயம், பொருளாதாரம் தொழில்துறை, வியாபாரம் ஆகியவற்றில் பூர்ண சுதந்திரமும், ஆதிக்கமும் பெறவேண்டும்."

இத்தீர்மானத்தின் வாசகத்திலும் திராவிட நாடு

என்பது சென்னை மாகாணம் என்பது விளக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு திராவிடநாடு என்று கேட்டபோது மைசூர் ராஜ்யத்தையோ, திருவாங்கூர், கொச்சி, ராஜ்யங்களையோ, அய்தராபாத் ராஜ்யத்தையோ கொண்டு ஒரு போதும் கேட்கப்பட வில்லை என்பதைத் திட்டவட்டமாக அறிய வேண்டும்.

மொழிவழி நாடுகள் அமைப்பு

இதற்கப்புறம் அதாவது 1953க்கு அப்புறம் சென்னை மாகாணத்தின் நிலப்படத்தில் ஒரு மாபெரும் மாறுதல் ஏற்பட்டது. சென்னை ராஜ்யத்தில் தமிழர்களுடன் இணைந்து ஒரு போதும் இருக்க முடியாது எனக்கூறி, கிளர்ச்சி செய்து, பொட்டி சீராமுலுவை பட்டினி கிடக்க வைத்து சாகடித்து, நாசவேலைகளில் ஈடுபட்டு, தெலுங்கர்கள் அவர்கள் ஆந்திராவைப்பிரித்து டெல்லியின் கீழ் உள்ள ஒரு பெரிய புது இராஜ்யமாக்கிக் கொண்டனர்.

1,27,780 சதுரமைல் பரப்பளவாக இருந்த சென்னை மாகாணம் ஆந்திரா பிரிந்ததனால் 60, 362 சதுரமைல் பரப்பளவு உள்ளதாகக் குறுகியது.

அதற்குமுன் ஆந்திரா பிரியாமுன் சென்னை மாகாண ஜனத்தொகை 5.7 கோடியாகும். ஆந்திரா பிரிந்த பின்னர், அதாவது 1953ம் வருஷம் அக்டோபர் 1ந் தேதி முதல் சென்னை மாகாணத்தின் ஜனத்தொகை 3.5 கோடியாகக் குறைந்தது.

24 ஜில்லாக்கள், 14 ஜில்லாக்களாகக் குறைந்தன. 1953லிருந்து 1956 அக்டோபர்வரை சென்னை மாகாணம் இதே நிலைமையில் இருந்தது.

1956ம் வருஷம் நவம்பர் 1ந்தேதி முதல் States-Reorganisation Commision Report மொழிவழி ராஜ்ய குழுவினரின் சிபாரிசுகளை ஏற்று எல்லா நாடுகளின் எல்லைகளையும் மாற்றித்திட்டியது அரசாங்கம். அதன்படி சென்னை ராஜ்யத்தில் இருந்த தென்கன்னட ஜில்லா கன்னட மாநிலத்துடனும் (மைசூர் மாநிலத்திற்கும்) மலபார்ஜில்லா திருவாங்கூர்,நாட்டுடனும்சென்றது ஆகவே பழைய திருவாங்கூர் கொச்சி, மலபார்ஜில்லா -இவைகளை எல்லாம் சேர்த்து கேரள ராஜ்யம் பிறந்தது.

ஆந்திராவும் அய்தராபாத் ராஜ்யத்துடன் இணைந்து ஆந்திரப்பிரதேஷ் ராஜ்யம் பிறந்தது.

இன்றைய தமிழ்நாடு

மேற்கூறிய மாற்றங்களால் சென்னை ராஜ்யத்தின் பரப்பளவு 50,113 சதுர மைலாகவும், ஜனத்தொகை 3 கோடியாகவும் குறைந்தது இதுதான் இன்றைய சென்னை ராஜ்யம். இது இன்றைய "தமிழ் நாடு". தமிழ் பகுதிகளைத்தவிர்த்த மலையாளப்பகுதியோ, கன்னடப்பகுதியோ, ஆந்திரப் பகுதிகளோ இப்போது இல்லை. இன்றைய சென்னை மாகாணம் அதன் காரணமாகவே பெயரளவில் 4 மொழி நாடாக இருந்தது மாறி

தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்திற்கும் ஆளாகியிருக்கிறது.

இதனால் இதைத் தமிழ்நாடு என்றழைப்பதில் எவ்வளவு பெருமை கொள்ளுகிறோமோ அவ்வளவு பெருமையுடன் சென்னை மாகாணம் தமிழ்நாடு பிரிக்கப்பட வேண்டும்; டெல்லி ஆதிக்க ஆட்சியினின்றும் விடுதலை அடைய வேண்டும் என்று கேட்கிறார், தந்தை பெரியார் அவர்கள். கன்னடப்பகுதிகளும், மலையாளப்பகுதியும், ஆந்திராவும் பிரிந்த நிலையை முழுக்க முழுக்க வரவேற்றுதைரியமாக, தந்தை பெரியார் அவர்கள் விடுதலையில் (12-10-55 புதன் இதழில்) விளக்கமாக ஒரு அறிக்கை விடுத்தார்கள். அது, இது:

நாடு பிரிவினை அறிக்கை பற்றி
பெரியார் அறிக்கை

'நாடு பிரிவினைக் கமிட்டி அறிக்கையைப் பார்த்தேன். இந்த அறிக்கை வெளிவருவதற்கு முன்பே அறிக்கைபற்றிய சேதிகளின் சுருக்கம் ஒருவாறு எனக்குத் தெரியவந்தது.

பொதுவாக ஆந்திரா பிரிந்ததிலிருந்தே நாட்டுப்பிரிவினையில் எனக்குக் கவலை இல்லாமல்போய்விட்டது. பிறகு கன்னடமும், மலையாளமும் (கர்நாடகமும், கேரளாவும்) பிரிவதில் இரண்டு மூன்று காரணங்களால் சிக்

கிரத்தில் பிரிந்தால் தேவலாம் என்கின்ற எண்ணம் தோன்றிவிட்டது. என்ன காரணம் என்றால்,

ஒன்று—கன்னடியனுக்கும் மலையாளிக்கும் இனப் பற்றோ, இன சுயமரியாதையோ, பகுத்தறிவு உணர்ச்சியோ இல்லை என்பதாகும். எப்படியெனில், அவர்களுக்கு வருணாசிரம வெறுப்பு கிடையாது. சூத்திரன் என்பது பற்றி இழிவோ, வெட்கமோ பெரும்பாலோருக்குக் கிடையாது. மத மூடநம்பிக்கையில் ஊறிவிட்டவர்கள்.

இரண்டு—அவர்கள் இருவரும் மத்திய ஆட்சி என்னும் வடவர் ஆட்சிக்கு தங்கள் நாடு அடிமையாக இருப்பது பற்றியும் அவர்களுக்குச் சிறிதும் கவலை இல்லை.

ஆகவே இவ்விரு துறையிலும் நமக்கு எதிர்ப்பான எண்ணங்கொண்டவர்கள், எதிரிகள் என்றே சொல்லலாம்.

மூன்றாவது—இவர்கள் இருநாட்டவர்களும் பெயரளவில் இருநாட்டவர்கள் ஆனாலும், அளவில் எஞ்சிய சென்னை ராஜ்யம் என்பதில் 14 மாவட்டங்களில் (ஜில்லாக்களில்) இரண்டே ஜில்லாக்காரர்கள் ஆவார்கள்.

1. சென்னை
2. செங்கல்பட்டு
3. வடஆர்க்காடு
4. சேலம்
5. கோவை
6. நீலகிரி
7. திருச்சி
8. மதுரை

9. ராமநாதபுரம் 12. தென் ஆர்க்காடு
10. திருநெல்வேலி 13. தென் கன்னடம்
11. தஞ்சை 14. மலபார்

அப்படி 14-ல்—7-ல் ஒருபாகஸ்தர்களாக இருந்து கொண்டு, தமிழ்நாட்டின் அரசியல், பொருளாதாரம் உத்யோகம் முதலியவைகளில் 3-ல் 2 பாகத்தை அடைந்துகொண்டு இவை கலந்து இருப்பதால் நம் நாட்டை தமிழ்நாடு என்றுகூட சொல்வதற்கு இடமில் லாமல் தடுத்து ஆண்டுகொண்டிருக்கிறார்கள்.

இதை நான் ஆந்திரா பிரிந்ததுமுதல் சொல்லிக் கொண்டே வந்திருக்கிறேன். ஆதலால், இவர்கள் சீக்கி ரம் ஒழியட்டுமென்றே கருதி வந்தேன். அந்தப்படி நல்ல சம்பவமாக பிரிய நேர்ந்துவிட்டார்கள். ஆதலால் நான் இந்த பிரிவினையை வரவேற்கிறேன்.

இந்தப் பிரிவினை நடப்பதில் சேர்க்கை சம்பந்த மாக ஏதாவது சிறு குறைபாடு இருந்தாலும் அதை மேற் கண்ட பெரும் நலத்தைமுன்னிட்டு கூடுமானவரை ஒத்துப்போகலாம் என்றே எனக்குத் தோன்றிவிட்டது. மற்றும் இந்தப் பிரிவினை முடிந்து தமிழ்நாடு தனி நாடாக ஆகிவிட்டால் நமது சமய, சமுதாய, தேசிய, சுதந்தர முயற்சிக்கும் அவை சம்பந்தமான கிளர்ச்சிக்கும் புரட்சிக்கும் நமது நாட்டில் எதிர்ப்பு இருக்காதென்றும் இருந்தாலும் அதற்கு பலமும் ஆதரவும் இருக்காதென் றும் கருதுகிறேன்.

நிற்க, இந்தப் பிரிவினை அமைப்பு ஏற்பாட்டில் எனக்கிருக்கும் சகிக்க முடியாத குறை என்ன இருக்கிறது என்றால், நாட்டினுடையவும் மொழியினுடையவும் பெயர் அடியோடு மறைக்கப்பட்டுப் போய்விடுகிறது என்கின்ற குறைபாட்டு ஆத்திரம்தான். நம்நாட்டுக்கு, சமுதாயத்திற்கு, இனத்திற்கு திராவிடம் என்று இருந்தபெயர், அது தமிழல்ல என்பதானாலும், நமக்கு அது ஒரு பொது குறிப்புச் சொல்லும் ஆரிய எதிர்ப்பு உணர்ச்சிச் சொல்லுமாக இருக்கிறதே என்று வலியுறுத்தி வந்தேன். அதை ஆந்திர, கர்னாடக, கேரள நாட்டு மக்கள் அல்லாமல் தமிழ் மக்களில் சிலரும்எதிர்த்தார்கள். பின்னவர்கள் என்ன எண்ணம் கொண்டு எதிர்த்தாலும், அவர்களுக்கு மற்ற மூன்று நாட்டார் ஆதரவு இருந்ததால் அதை வலியுறுத்துவதில் எனக்கு சிறிது சங்கடமிருந்தது. அவர்கள் மூவரும் ஒழிந்த பிறகு அவர்களையும் சேர்த்துக் குறிப்பிடத்தக்க ஒரு சொல் நமக்குத் தேவை இல்லை என்றாலும், திராவிடன் என்ற சொல்லை விட்டுவிட்டு,தமிழன் என்று சொல்லியாவது தமிழ் இனத்தைப் பிரிக்கலாம் என்றால், அது வெற்றிகரமாக முடிவதற்கு இல்லாமல் பார்ப்பான் (ஆரியன்) வந்து நானும் தமிழன்தான் என்று கூறிக்கொண்டு உள்ளே புகுந்து விடுகிறான்.

இந்த சங்கடத்திற்கு—தொல்லைக்கு என்ன செய்வது என்று யோசித்துக் கவலைப்பட்டுக் கொண்டு இருக்கும்போது, இப்போது மற்றொரு மாபெருந் தொல்லை நெஞ்சில் இடிவிழுந்ததுபோன்று வந்து தோன்றி இருக்கிறது.

அதுதான் திராவிடத்தை அல்லது தமிழ்நாட்டை விட்டு ஆந்திரர், கர்நாடகர், மலையாளிகள் பிரிந்து போன பின்புங்கூட, மீதியுள்ள யாருடைய ஆட்சேபனைக்கும் இடமில்லாத தமிழகத்திற்கு, தமிழ்நாடுஎன்ற பெயர்கூட இருக்கக்கூடாது என்று பார்ப்பானும் வடநாட்டானும் சூழ்ச்சி செய்து, இப்போது அந்தப் பெயரையே மறைத்து ஒழித்து பிரிவினையில் சென்னைநாடு என்று பெயர் கொடுத்திருக்கிறதாகத் தெரிகிறது.

இது சகிக்க முடியாத மாபெரும் அக்கிரமமாகும். எந்தத் தமிழனும், அவன் எப்படிப்பட்ட தமிழனானாலும் இந்த அக்கிரமத்தை சகித்துக்கொண்டிருக்கமாட்டான் என்றே கருதுகிறேன். அப்படி யார் சகித்துக்கொண்டிருந்தாலும் என்னால் சகித்துக்கொண்டிருக்க முடியாதென்று சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இதைத் திருத்த தமிழ்நாட்டு மந்திரிகளையும், சென்னை, டில்லி, சட்டசபை, கீழ் மேல்சபை அங்கத்தினர்களையும், மிக மிக வணக்கத்தோடு இறைஞ்சி வேண்டிக்கொள்கிறேன்.

தமிழ், தமிழ்நாடு என்கின்ற பெயர்கூட இந்நாட்டுக்கு, சமுதாயத்திற்கு இருக்க இடமில்லாதபடி எதிரிகள் சூழ்ச்சி செய்து வெற்றி பெற்றுவிட்டார்கள் என்கின்ற நிலைமை ஏற்பட்டுவிடுமானால் பிறகு என்னுடையவோ, என்னுடைய கழகத்தினுடையவோ என்னைப் பின்பற்றும் நண்பர்களுடையவோ வாழ்வு வேறு எதற்கு ஆக இருக்கவேண்டும்?-என்று எனக்குத் தோன்றவில்லை.

இந்த காரியம் மாபெரும் அக்கிரமமான காரியம் என்பதோடு மாபெரும் சூழ்ச்சி மீது செய்யப்பட்ட காரியம் என்றே கருதுகிறேன். "நம்நாடு எது? நமது மொழி எது? நமது இனம் எது? என்பதையே மறைத்து விடுவதென்றால், பிறகு தமிழன் எதற்கு ஆக உயிர்வாழவேண்டும்? என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவேஇக்கேடு முளையிலேயே கிள்ளப்பட்டு விடும்படி முயற்சி செய்யும்படியாக எல்லாத் தமிழர்களையும் உண்மையிலேயே வணங்கி வேண்டிக்கொள்கிறேன்.

ஈ. வெ. ரா.

மொழிவழி ராஜ்யம் அமைந்த நிலையில் தமிழ் நாட்டை விட்டு மலையாள, கன்னடப் பகுதிகள் பிரிந்த நிலையில் தந்தை பெரியார் அவர்கள் திராவிடர் கழகத்தின் மத்திய செயற்குழுவைக்கூட்டி, அதில் இத்தகு மாற்றத்தைவரவேற்று தீர்மானமும்நிறைவேற்றியுள்ளார்.

> "வடநாட்டானுடைய ஆட்சி ஆதிக்கத்திலிருந்து முழுச் சுதந்தரத்துடன் விலக வேண்டுமென்ற முயற்சிக்கு ஒத்துழைக்க முன்வர இஷ்டப்படாத ஆந்திரா, கேரளா, கன்னட நாடுகள் திராவிட நாட்டிலிருந்து விலக்கமடைந்து விட்டதற்கு இக் கமிட்டி மகிழ்ச்சி அடைவதோடு, இனி தமிழ்நாடு முழுசுயேச்சை விடுதலைக்கு அதிதீவிரமாகப்பாடுபடவேண்டியதென இக்கமிட்டி தீர்மானிக்கிறது"

இத்தீர்மானம் நிலைமையைத் தெளிவுபடுத்தும் அருமையான விளக்கம் என்பதை எவரே மறுக்க முடியும்?

ஆகவே திராவிடநாடு திராவிடருக்கே என்ற கொள்கை எப்படி எப்படி வளர்ந்து இன்றைய வடிவத்தை அடைந்துள்ளது என்பது இதன் மூலம் புலனாகும்.

பெரியார் கொள்கையில் மாற்றமேதுமில்லை

இந்தக் கண்ணோட்டத்தோடு இப்பிரச்னையை அணுகினால் தந்தை பெரியார் அவர்கள் அன்று எந்தக் கருத்தோடு திராவிடநாடு பிரிவினையை வலியுறுத்தினார்களோ அதே சென்னை ராஜ்ய விடுதலையைத்தான் இன்றும் கூறி வருகிறார் என்பது நன்கு விளங்கும்; அன்றைக்கு திராவிடநாடு என்று கூறவேண்டியிருந்த அவசியம் சென்னை ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இல்லை.

"தமிழ்நாட்டுப் பிரிவினைபற்றிப்பேச மாட்டோம்; மொழிவழி பிரிந்து இனவழி கூடக்கூடிய, பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய திராவிட சமதர்மக்குடியரசுக் கூட்டாட்சியே" என்று விளக்கம் தருகிறார்களே, இவ்விளக்கம் திராவிடர் கழகத்தில் எந்த மாநாட்டிலாவது தரப்பட்டதா? தந்தை பெரியார் அவர்கள் சமஷ்டி. அதாவது ஆந்திர, கேரள, கன்னட, தமிழ்நாடுகளின் கூட்டாட்சி என்று எப்போதாவது இதற்கு விளக்கம் தந்துள்ளார்களா?

திராவிடர் கழகத்தை விட்டுப்பிரிந்த கண்ணீர்த்துளிகள் தாங்களாகவே ஏற்படுத்திக்கொண்ட நாட்டுப்பிரிவினையைப்பற்றிய இவ்விளக்கத்தில் ஏதாவது பொருள் இருக்க முடியுமா?

"பெரியார் அவர்களுக்கு திராவிடநாடு பெறுவோம் என்ற நம்பிக்கையில்லை; ஆகவே தமிழ்நாடாவது கேட்டு வைப்போமே என்று கேட்கிறார். எங்களுக்கு திராவிடநாட்டின் பிரிவினையில் நம்பிக்கை இருக்கிறது; ஆகவே அதை விட மாட்டோம்" என்று க. து. கட்சியினர், தோழர் ஈ. வெ. கி. சம்பத் போன்றவர்கள் அவர்களது திராவிடநாடு மாயாவாதத்தின் தன்மையைச் சுட்டிக்காட்டிய பிறகும்கூட கூறிக்கொண்டுள்ளனரே இதைப்பற்றியும் ஆராய வேண்டும்.

க. து. க்கள் விடாப்பிடி

தமிழ்நாட்டைத்தவிர ஆந்திராவிலோ, கேரளத்திலோ, கன்னடத்திலோ இவர்களது திராவிடக் கூட்டாட்சிக் கருத்தை ஏற்பவர்களோ, வரவேற்று அதை செயல்படுத்த முனைபவர்களோ ஒருவரும் இல்லை என்பதும் ஆதரவற்ற கோரிக்கையை ஏன் விடாப்பிடியாக பிடித்துக்கொண்டு, 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்பதற்கு இலக்கியமாக இவர்கள் ஏன் திகழவேண்டும்? என்று கேட்பதும், திராவிடநாட்டின் சாத்தியக் கூறுபாடுகளை ஆராய்ந்து, அதற்கு வாய்ப்பில்லை; இல்லாத ஒன்றை இருப்பதாக எண்ணிக்கொண்டலைந்து முடிவில் அது 'பொய்யாய், பழங்கதையாய், கனவாகி மெல்லப் போனதுவே' என்று போவானேன் என்று எடுத்துக்காட்டி திராவிட நாட்டுக் கருத்தை மறுப்பது ஒருவகையான வாதம் என்றாலும் கூட தந்தை பெரியார் அவர்கள், யாருக்கும் இல்லாத

துவுணிடனும், தெளிவுடனும் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அதாவது, "இவர்கள் கூறும் திராவிடநாடு, (கேரளம், ஆந்திரம், கன்னடம், தமிழ்நாடு சேர்ந்த கூட்டாட்சி) **தமிழர்களுக்குத் தற்கொலை** நாடாகும்; ஆகவே கிடைத்தாலும் வேண்டாம் என்பேன்; சுதந்திரத்தமிழ்நாடுதான் தேவை" என்று தந்தை பெரியார் அவர்கள் பல கூட்டங்களில் யாராலும் மறுக்க முடியாத வாதங்களை எடுத்துக்கூறி வருகிறார்கள்.

மெஜாரிட்டியான தமிழர் மைனாரிட்டியாவதா?

"நான் கேட்ட திராவிடநாடு (சென்னை ராஜதானி) என்பதில் தமிழர் 3 கோடி, மலையாளி 30 லட்சம், கன்னடியன் 20 லட்சம், தெலுங்கன் 2½ கோடியிருந்தார்கள்.

இதன்படி 3 கோடி மக்களாகிய தமிழர்கள்தான் மெஜாரிட்டியினர்; மந்திரிசபை அமைப்பதிலும், கல்வி உத்யோகத்திலும் தமிழர்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைக்காமற் போகாது; ஆனால், இன்று கண்ணீர்த்துளியினர் கேட்கும் (திராவிடக் கூட்டாட்சியில்) திராவிடநாட்டில் தமிழர்கள் சிறுபான்மையினராகவே காட்சியளிப்பார்கள். காரணம்,

தெலுங்கர்	சுமார்	3½	கோடி
மலையாளத்தவர்	,,	1½	கோடி
கன்னடியர்	,,	2	கோடி
தமிழர்	,,	3	கோடி

யாக இருப்பார்கள்; இதன்படி தெலுங்கர், மலையாளி கன்னடியர் இம்மூவரும் சேர்ந்து 7 கோடியாக இருப்பார்கள்; அவர்கள் முன் 3 கோடியாக இருக்கும் தமிழர்கள் சிறுபான்மையினராகிவிடுவதோடு இவர்கள் உத்யோகத்துறையிலும் கல்வியிலும்கூட இன்னும் வாய்ப்பு இழந்த மக்களாகவே இருப்பார்கள். இப்போதே தமிழ்நாட்டில் உத்யோகத்துறையும், கல்வித்துறையும், பார்ப்பானுக்கும், மலையாளிக்கும், கன்னடியனுக்குமே ஆதிக்கபீடமாக இருந்துவருகிறது என்று கூறியதோடு, இந்த நிலை வந்துவிடக்கூடாதே என்று கருதித்தான் மைசூர், கேரளம், தமிழ்நாடு ஆகிய மூன்றும் சேர்ந்து தட்சிணப் பிரதேசம் என்ற ஒரு அமைப்பு ஏற்படவிருந்ததை தடுத்து நிறுத்தினோம்.

சட்டசபை இடங்களை எடுத்துக் கொண்டால்கூட இந்த நாலு நாடுகளும் சேர்ந்து இன்று 840 இடங்கள் ஆகின்றன இதில்,

ஆந்திராவுக்கு-	301	இடம்.
கேரளாவுக்கு-	126	இடம்.
மைசூருக்கு -	208	இடம். ஆக

இம்மூன்று நாடுகளுக்கும் 635 இடங்கள்

ஆகிவிடுகிறது மீதியாக தமிழ் நாட்டுக்கு இருக்கும்சட்டசபை ஸ்தானங்கள் 205. இருநூற்றைந்தேயாகும். இது

மொத்த அளவில் மூன்றில் ஒரு பகுதிக்கும் குறைச்சலா னதேயாகும்

இதன்படி இன்று 'திராவிட நாடு' கிடைத்தால் அது தமிழர்களுக்கு தற்கொலை அல்லாது வேறு என்னவாக இருக்க முடியும்? என்ற இந்தக் கேள்விக்கு, "தந்தை பெரியார் முன்னுக்குப் பின் முரணாகப் பேசிவருகிறார்" என்று குறைகூறி வரும் கண்ணீர்த்துளிகள் ஏன் பதில் கூறியதே இல்லை?

தமிழ்நாடு கிடைக்காமல் தடுக்கும் சூழ்ச்சியா ?

நம்மிடம் இருக்கும் வரையில்தான் நாம் ஒரு நாட் டைப்பற்றிக் கவலைப்பட வேண்டுமே தவிர, கைவிட் டுப்போன பகுதிகளைப் பற்றிப் பேசுவது அரசியல்விவே கமாகுமா? அதுவும் நம்மிடம் (சென்னை இராஜ்யத்தில்) இருந்த தெலுங்கு, கன்னட, மலையாள நாடுகள் நம்மிட மிருந்து பிரிந்துபோகவேண்டுமென்று கருதியே சண்டித் தனமும் காலித்தனமும் பிடிவாதமும் செய்து பிரிந்து போய் டெல்லிக்கு அடிமைநாடாக இருக்க மனமொப்பி விலகி இருப்பவர்களுடன் சேருவது என்பது, நாம் எதற்கு ஆக தமிழ்நாடு கேட்கிறோமோ அந்த இலட்சி யம் நிறைவேறாமல் இருக்கவும், நமக்கு தமிழ்நாடு கிடைக்கக்கூடாது என்று கருதி சூழ்ச்சி செய்யும் கூட் டத்திற்கு கை ஆள் ஆவது என்பது அல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்?

நாம் சென்னை மாகாணம்தான் திராவிடநாடு என்று தீர்மானம் 1940-ல் போட்டோம். 1934-க்கு முன்புவரையில் **கஞ்சம் ஜில்லா** சென்னை மாகாணத்துடன் இணைந்திருந்தது. பிறகு அது ஒரிசாவுடன் சேர்க்கப்பட்டுவிட்டது. இல்லை, "கஞ்சமும்தான் வேண்டும் அதைப் பற்றியும்தான் பேசுவோம்" என்று நாம் கூறினால் கஞ்சம் ஜில்லாவாசிகளும், ஒரிசாக்காரர்களும் நமது அறிவைப் பற்றி என்ன நினைப்பார்கள்?

1935க்கு முன்பு பர்மா பிரியவில்லை. இந்தியாவுடன் சேர்ந்தே இருந்தது. இன்று பர்மா எப்படி நடந்து கொள்ள வேண்டும். எத்தகைய அரசியல் அமைப்பை வைத்துக் கொள்ள வேண்டும் எனமுடிவெடுக்க வேண்டியவர்கள் பர்மியர்களா? அல்லது நாமா?

1947க்குமுன் பாகிஸ்தான் பிறக்கவில்லை. பாரத மாதா பர்மாவை யிழந்த நிலையில் மட்டுமே இருந்தாள். பாகிஸ்தானோடு கூட்டு சேருவோம் என்று நாம் பேசுவது பைத்தியக்காரத்தனமாகி விடாதா?

அதுபோல நாடுதனியாக வேண்டும். விடுதலை பெற வேண்டும் என்று பெரியதொரு லட்சியத்தை வைத்துப் பாடுபடும் நாம் நமது நாட்டைப் பற்றித்தானே கவலைப் பட வேண்டும்? அதுதானே நாணயம்?

பிரிந்தவர்கள் இணைய வழியேது?

திராவிட நாகரீக ஒருமைப்பாட்டால் பிணைக்கப்

பட்டவர்கள் ஆந்திரர்களும், கன்னடியர்களும், மலை யாளிகளும், தமிழர்களும்; அதை வைத்துத்தான் இவர் களை ஒன்று சேர்க்க முயற்சிக்கிறோம் என்று க. துக் கள் கூறுவார்களேயானால் ஹாரப்பாவும், மொகஞ்சோ தாராவும்,—சிந்துவெளி நாகரீகம்—திராவிட நாகரீகத்தின் பூமிகள் என்று ஹீராஸ் பாதிரிகளும், சர் ஜான் மார்ஷல் களும் கூறியதை வைத்து பஞ்சாபையும், பாகிஸ்தானத் தின் ஒரு பகுதியையும் கூட சேர்த்து திராவிடக்கூட் டாட்சி கொண்ட திராவிடநாடு அமைக்க வேண்டுமே! அதற்கு இவர்கள் தயாரா?

"மொழிவழி, பிரிந்து, இனவழி கூடும், திராவிட சம தர்மக்குடியரசுக் கூட்டாட்சி என்று மொழி அடைப் படையை வைத்து திராவிடக் கூட்டாட்சி என்றால் திராவிட மொழிகள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன் னடம் மட்டுமல்லவே பஞ்சத் திரவிடமொழிகளில் இன் னும் துளு, குடகு இருக்கின்றன.

டாக்டர் கால்டுவெல் எழுதிய ஒப்பு இலக்கணப் கடி (தமிழ்மொழி பெயர்ப்பு 55ம்பக்கம் 1911ம்) ஆண்டு கணக்குப்படி:-

திராவிட மொழிகள்	பேசுவோர் தொகை
1. தமிழ்	1, 91, 89, 740
2. தெலுங்கு	2, 35, 42, 859
3. கன்னடம்.........	1,05 25, 739
4. மலையாளம்......	6792, 277
5. துளு	5, 31, 498

6.	குடகு	42,887
7.	துடம்	730
8.	கோதம்	1,280
9.	கோண்டு.........	15, 27, 157
10.	கந்தம்(கு)	5, 30, 476
11.	இராஜ்மகால் ...	64, 825
12.	ஓரோவான்......	8, 00, 328
	மொத்தம் திராவிடர்	6, 35, 49, 840

துதமும் கோதமும்:- நீலகிரி மலைப்பிரதேசத்தில் வாழும் பூர்வீக குடிகளால் பேசப்படுவதாகும். பேசுபவர்கள் தொகை 700. கோதம் பேசுபவர்கள் தொகை 1200.

கோண்டு;- இம்மொழி பேசுபவர்கள் கோண்டர்கள். இவர்கள் மத்திய இந்தியாவில் குன்றுகளிலும் காடுகளிலும் வாழும் பழங்குடி மக்களாவர்கள். அவர்கள் எண்ணிக்கை 1,50,000 ஆகும்.

காந்தம் அல்லது கு:- இம்மொழி பேசும் பூர்வீகக் குடிகளான திராவிடர்கள் மத்திய இந்திய நாடுகளில் ஓரிசாவின் குன்றுகளிலும் வாழ்கின்றனர். இவர்களின் எண்ணிக்கை 1811ம் ஆண்டு கணக்குப்படி 5, 30, 000 ஆகும்.

ராஜ்மகால்:- ராஜ்மகாலம் என்று அழைக்கப்படும் பழங்குடி மக்கள் வங்காளத்திலுள்ள இராஜ்மகால் மலை

களில் பண்டைக்காலத்திலிருந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் தொகை 64,000.

ஒராவொன்:- இம்மொழி பேசும் மக்கள் சோட்டா நாகபுரியைச் சுற்றி வாழ்கின்றனர். இவர்கள் எண்ணிக்கை 8, 00, 000.

திராவிட மொழி ஒப்பிலக்கணம் வகுத்த டாக்டர் கால்டுவெல் கருத்துட்படி வங்காளப்பழங்குடி மக்களில் பெரும் பகுதியினர் திராவிடர்குழுவைச் சேர்ந்தவர்களே. வங்காள கோட்டங்களிலும் சோட்டா நாகபுரி, ஒரிசா முதலிய பகுதிகளிலும் அவற்றை அடுத்த காடுகளிலும் வாழும் பூயியர்கள் கொச்சர்கள் (The Kocche) ஆகிய இனத்தார்களும் திராவிடர்களேயாவர். இவர்கள் எண்ணிக்கை முறையே 25, 00, 000; 15, 00, 000.

இப்போது இத்தொகை பல மடங்காகப் பெருகியிருக்கக்கூடுமேயல்லாது அருகுவதற்கு வழிஇல்லை "இனவழி நாடு கேட்கிறோம் அதுதான் திராவிடநாட்டுப் பிரிவினைக்கு அடிப்படை" என்று க. து. வினர் கூறுவார்களேயானால் வங்காளம், ஒரிசா, ராஜ்மகல் பிரதேசங்கள், அசாம் பிரதேசங்கள், சோட்டா நாகபுரி பிரதேசங்கள் ஆகியவற்றையல்லவா சேர்த்துக்கேட்க வேண்டும்?

திராவிட நாடு இலட்சியத்தில் தெளிவும் இல்லை; அடையத் திட்டமும் இல்லை

அடுத்தபடியாக திராவிடநாட்டுப் பிரச்னைதான்

தங்களது உயிர் பிரச்னை என்று கூறிவரும் கண்ணீர்த் துளிக்கட்சியினரில் அதன் தலைவருக்கோ தம்பிமார்களுக்கோ அதைப்பற்றித் தெளிவான திட்டவட்டமான கருத்து இருக்கிறதா? என்று ஆராய வேண்டியது அவசியம்.

“நமக்கு ஏற்ற அளவு நாடு இருக்க வேண்டும்; நமக்கு ஏற்ற அளவு இருக்கிற நாடுதான் தமிழ்நாடு, திராவிட நாடு என்கிறோம்”—

இது க. து. கட்சி மூலவர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள் **13-2-57** அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தேர்தல் கூட்டமொன்றில் ஆற்றிய உரை. இது அவருடைய சொந்தப் பத்திரிக்கையாகிய “திராவிடநாடு” **24—2—57ந்** தேதிய இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

“ஒன்று மட்டும் கல்மேல் எழுதுவதுபோல் உங்கள் நெஞ்சத்திலே பதித்து வைத்துக் கொள்ளுங்கள்; சர்ச்சில் எப்படி ஆணவத்தோடு பேசியவன், இந்தியாவுக்கு விடுதலை தந்தானோ, அதேமுறையில் ஆணவத்தோடு பேசுகிற டெல்லி, தன்னுடைய ஆணவத்தைக் குறைத்துகொண்டு **தமிழர்களிடத்தில் தனியாட்சியை தந்தே தீரும்** அதைப் பெறாமல் நாங்கள் ஓயப்போவதில்லை.”

—இதுவும் திருவாளர் **அண்ணாதுரை 9-2-57ந்** தேதியன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தேர்தல்பொதுக் கூட்டத்தில் பேசியதே இதுவும் அவரது இதழில் வெளிவந்ததே.

"தமிழ்நாடு சிறிய நாடாக இருந்தாலும் ஆச்சாரியார் அவர்களே, ஒருபுறம் நல்ல அனுபவம் பெற்ற தாங்கள் இருக்கிறீர்கள்; மற்றொரு பக்கத்தில் நல்ல ஆற்றல் படைத்த பெரியார் இராமசாமி இருக்கிறார்......

"ஆச்சாரியார் அவர்களிடத்திலே தமிழர்கள் மற்றொரு சேவையை எதிர்பார்க்கிறார்கள். அந்தச்சேவை தான் **தமிழர்களுடை-ஆசையை-தமிழ் நாட்டு பண்பை-தமிழர்களுடைய மாபை-தமிழ் நாட்டு அரசை வாங்கித் தருவது.** அந்த அரிய காரியத்தை ஆச்சாரியார் அவர்களே அவர் காலத்திலேயே செம்மையாகச் செய்து தர வேண்டுமென்று தமிழ் நாட்டு மக்கள் விரும்புகிறார்கள்.

தாங்கள்தான் நாட்டின் ஒற்றுமையைப் பரப்பினீர்கள். இப்பொழுது தாங்களேதான் நாட்டுப்பிரிவினைக்கு வழி செய்ய வேண்டும் **தமிழருக்கு தமிழ் நாட்டை வாங்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்."**

இவை 23-1-58 அன்று சென்னை இலட்சுமிபுரம் யுவர் சங்கச் சார்பில் நடந்த பொதுக் கூட்டத்தில் ராஜாஜியும் அண்ணாதுரையும் முதன் முதலாக ஒன்றாகப்பொது மேடையில் பேசிய போது, திரு அண்ணாதுரை தெரிவித்த கருத்துக்கள் அவரது இந்தப்பேச்சு 'நம் நாடு' ஏட்டிலும் வந்தது. சென்னை அண்ணாபதிப்பகத்தாரால் வெளியிடப்பட்ட 'அன்பழைப்பு' என்ற புத்தகத்திலும் காணப்படுகிறது.

அவர் மட்டுமல்ல க. து. கட்சியில் திரு. சி. என், ஏ அவர்களுக்கு அடுத்தபடி சட்டசபையில் பதவி வகிக்கும் திரு. க. அன்பழகன் அவர்கள் 5-4-61 அன்று விருது நகரில் 'தமிழ் நாடு' பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியில்,

"இப்பொழுது நாட்டில் திராவிட நாடு என்றும் தமிழ் நாடு என்றும் பிரிந்து வேற்றுமைகிளப்பப்பட்டிருக் கிறது. இதன் மூலம் கழகத்தின் செல்வாக்குக் குறைய லாம் என்று சிலர் அதனைப் பயன்படுத்திச் செல்வாக்கு பெற எண்ணுகிறார்கள் **திராவிட நாடும், தமிழ் நாடும் நமது கொள்கையளவில் ஒன்றுதான்** அதில் வேறு பாடுகள் கற்பிப்பதற்கு இடமே இல்லை."

இது 7-4-61 வெளியூர் தமிழ் நாடு நாளிதழில் வந் துள்ளது. அதுமட்டுமல்ல. திராவிட நாட்டுப் பிரி வினையை விளக்கக்கூடிய வகையில் தெளிவு மூல வருக்கே கிடையாது என்பது அவரது பேச்சின் மூலமே விளங்கும்.

"இன்றைய தினம் எனக்குக்கூட திராவிட நாட டின் எல்லை தெரியாது" இது சி. என். ஏ. அவர்களின் பேச்சு- 'நம் நாடு' 9-5-58 இதழ்,

இலட்சியத்தில் தெளிவு இல்லை என்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு. திரு. வினோபாபவே அவர் களை திரு. அண்ணாதுரை அவர்களும் 10—6—56ல் சந்தித்தபோது "உங்கள் திராவிட நாடு எப்படி இயங்

கும்? அதுபற்றி உங்கள் கருத்தென்ன?" என்று கேட்டதற்கு அண்ணாதுரை அவர்கள் **அது இந்திய ஃபெடரேடினுக்குள் தனித்த சப்ஃபெடரேஷனாகவே இயங்கும். வெளிநாட்டு விவகாரங்களை இந்திய ஃபெடரேஷன் சப்ஃபெடரேஷனுடன் கலந்து ஆலோசித்து முடிவுகள் செய்யும்**" என்று கூறினார். இது 'வினோபாவும் அண்ணாதுரையும் என்ற பெயரில் 'கிராமோதய வெளியீடு-எண் 5"ல் வெளிவந்துள்ளது.

இது எவ்வளவு தெளிவு அவருக்கு இருக்கிறது என்பதைக் காட்டவில்லையா?

கூ து. கட்சிக்குள்ளேயே கருத்து வேற்றுமை

தந்தை பெரியார் அவர்கள் சுதந்திரத் தமிழ் நாடுதான் இனி நமக்குத்தேவை என்று கூறிவிட்ட பிறகு ஏற்பட்டுள்ள நிலை குறித்து பரிசீலனை செய்ய திரு. வி. பி. இராமன் அவர்கள் வீட்டில் ஒரு கருத்தரங்கை திரு சம்பத் அவர்கள் கூட்டியபோது திராவிட நாடு என்ற லட்சிய முழக்கத்திலிருந்து சுதந்தரத் தமிழ் நாட்டிற்குப் பாடுபடுவோம் என்று மாறுவது என்று ஒவ்வொருவரும் முடிவு செய்தனர், என்றும் அந்த 'கருத்தரங்கில்' கலந்துகொண்ட கலைஞர் கூட 'ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?' என்று புத்தகம் எழுதிய என் மருமகனே **இன்னும் எத்தனை நாளைக்கு திராவிடநாடு என்று ஏமாற்றிக்கொண்டிருப்பது** என்று என்னைக் கேட்கிறார் என்றும் கூறி

னார் என்றும் கூறியதோடு, அதில் விவாதிக்கப்பட்ட ஒவ்வொருவரின் கருத்துரைகளையும் தொகுத்து எழுதிக் கொடுத்தோம். அதை திரு. அண்ணாதுரைபார்த்துவிட்டு

"இதை ஒப்புக்கொண்டு இப்போது மாற்றவேண்டாம். அது கேலிக்கு இடம் வகுக்கும். திருச்சியில் கூடும் மாநில மாநாட்டில் அந்த மாற்றத்தை அறிவிக்கும் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன். நீ வழிமொழிந்து விடு என்று திரு அண்ணாதுரை கூறினார்' என்று சென்னை ஒற்றவாடையிலும் மற்றும் பல ஊர்களிலும் திரு. ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கூறிவருகிறாரே அதற்கு இன்றுவரை எந்த தலைவரிடத்திலும் இருந்தோ, அல்லது மூலவரிடத்திலிருந்தோ மறுப்போ, விளக்கமோ வரவில்லையே?

அது எதைக் காட்டுகிறது? இந்த குறிப்பிட்ட நிகழ்ச்சி உண்மையானது என்பதையும், நடைபெற்றதை ஒப்புக்கொள்கிறார்கள் என்றும்தானே ஆகிறது? சிந்தனையில் நேர்மை இருந்தால் (**Intellectual honesty**) இன்னமுமா திராவிடநாடு என்றகுரல் எழும்பும்? லட்சியத்திலே எவ்வாறு தெளிவற்ற கொள்கைக் குழப்முளதோ, அதன் காரணமாகவே அதை அடைவதற்குரிய திட்டத்திலும், திட்டமிட்டு வரையறுத்து அறுதியிட்டுக் கூற இயலாதவண்ணம் கேலிக்கணைகளால் தாக்கப்படும் வண்கயிலேயே பேசி வருகிறார்கள்.

திராவிடநாடு பெற திட்டம் உண்டா?

எப்படி திராவிடநாடு அடைவது? திராவிடக் கூட்டாட்சியை செயலாக்குவதற்குரிய முறை என்ன என்பதை இடைச்சிய கீதம், இதயகீதம், என்றெல்லாம் கூறிவரும் அவர்கள் இதுவரை குறிப்பிட்டிருக்கிறார்களா? 'ஆளுக்கொரு பேச்சு; அதிலும் நாளுக்கொரு மாற்றம்' என்கிற தன்மையில்தானே இருந்துவருகிறது?

"திராவிடநாடு வேண்டும் என்று யாரும் கேட்கத் தயாராக இல்லை என்றால் நான் தனியாகவாவது திராவிடநாடு திராவிடருக்கே என்று கூறிக்கொண்டாவது திண்ணையில் படுத்திருப்பேன்" என்று கூறுகிறார் மூலவர்' திண்ணை தூங்கும் வேதாந்தமா திராவிடநாட்டுப் பாதை?

அய் நா. மூலம்

சென்னையில் கூடிய அவர்களது முதல் மாநில மாநாட்டில் தம்பிகளைப் பார்த்து மூலவர் கூறினார், 2 லட்சம் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொடுங்கள் நான் அய். நா. சபைக்குச் சென்று திராவிடநாடு பிரிக்க வழி செய்கின்றேன் என்றார்!

நினைத்தவுடன் செல்லுவதற்கு அய். நா. சபை என்ன பொழுதுபோக்கு கிளப்பா (Recreation Club)? என்று கேட்டதோடு கடந்த பத்து பனிரெண்டு ஆண்டுகளாக தனி நாடாக இயங்கிவரும், உலக நாடுகளிலேயே அதிக ஜனத்தொகை உள்ள நாடாக உள்ள சுமார் 50 கோடி உள்ள கம்யூனிஸ்ட் சீனாவை இன்னமும் அனு

மதிக்க மறுக்கிறார்களே? எப்படி அய். நா.வில் திராவிட நாடு பிரச்னை எழுப்ப முடியும்? இவர் எப்படி அங்கு செல்லமுடியும்? என்று திராவிடர் கழக மேடைகளிலும் மாற்றுக்கட்சி மேடைகளிலும் இடைவிடாது எழுப்பிய கேள்விக்குறி அதற்கப்புறம் இவர் அதைத் திருப்பிக் கூறாதவண்ணம் ஆக்கியது.

சினிமா மூலம் திராவிட நாடாம்?

'சென்சார் (தணிக்கை) செய்யாமல் 4 சினிமாப் படங்கள் எடுக்க ஆட்சியாளர்கள் அனுமதிப்பார்களேயா னால் அடுத்தநாளே திராவிடநாடு கிடைத்துவிடும்' என்று க. து. கட்சியின் இன்றைய பொருளாளர் மதுரையில் முழங்கினார். நாட்டு விடுதலைக்கு வழிவகுக்கும் வீரர்கள் பாசறையின் விடுதலைக் குரல் இவ்வளவு பரிதாபகரமா கவா இருக்கவேண்டும் என்று நாட்டோர் எள்ளிநகையா டினர். 'ஜின்னாவைப்போலவே நான் திராவிடநாட்டைப் பிரிப்பேன்' என்று கூறினாரே மூலவர், ஜின்னா பாகிஸ் தானை எப்படிப் பெற்றார்? காலட்சேபம் நடத்தியா? அல்லது சென்சார் செய்யாத சினிமாப் படங்களை எடுத் தா?

"ஆண்டவனை அடைவதற்கு பக்தர்கள் 'சிவசிவா' என்று மந்திரம் ஓதிக்கொண்டிருப்பதுபோலவே, 'திரா விடநாடு, திராவிடநாடு' என்று ஜபித்துக்கொண்டேயிருந் தால் திராவிடநாடு வந்துவிடும் என்று கூறினார் க. து. மூலவர் ஒருமுறை மதுரைக் கூட்டத்தில். இல்லாத

சிவனை இருப்பதாக நினைத்து ஏமாறும் பக்தர் கூட்டம் போல் தம்பிமார்களும், சிவனைக் கூறி ஜீவனை வளர்க் கும் பூசாரி நிலையில் அதன் 'தலைவர்களும்' என்பதைத் தவிர இந்த உவமையில் சத்தேது? சாரமேது?

'திராவிடம் அடைய இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று வேட்டு முறை; மற்றொன்று ஓட்டு முறை. இந்த இரண்டும் இல்லாத மூன்றாவது நான் கூறுகிறேன் அதுதான் ஓட்டும் முறை. அதில் ஈடுபாடு கொண்டு உழைத்தால் திராவிடநாடு கிடைக்கும் என்று பேசிய வரும் திரு. அண்ணாதுரைதான்.

ஓட்டு முறையில்தான் நம்பிக்கையிருக்கிறது எங்க ளுக்கும் வேட்டுமுறையில் நம்பிக்கையில்லை. அது ஆகாது; கூடாது என்று ஒருபடி இறங்கினார் பிறகு.

பிறகு கொஞ்ச காலத்திற்கு முன்பு பட்டுக்கோட் டையில் பேசியபோது அவர் சொன்னார்; ஓட்டு முறை யும் வேண்டும்; வேட்டு முறையும் வேண்டும் என்று உம்மை அழுத்திப்பேசினார்!

சட்டசபை மூலம் (ஓட்டுமுறை) திராவிடநாடு பிரி வினை எவ்வாறு சாத்தியம் என்று தந்தை பெரியார் அவர் கள் பல மேடைகளில் கேட்டு வருகிறார்களே, அதற்கு அதற்கு நாளது வரையில் பதில் உண்டா? தமிழ்நாட்டுப் பிரிவினைக்குப் போராட்டம் வகையில் தேசப்படத்தை எரிக்கும் கிளர்ச்சி நடத்தியபோது தந்தை பெரியார் அவர் கள் விடுத்த அறிக்கைகளைத் தொகுத்த 'சுதந்தரத் தமிழ்

நாடு ஏன்?' பக்கம் 74-ல் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் ஓட்டுக்காரனே உணர்ந்து பார் வேட்டு இல்லாமல் நடக்குமா? என்று எழுப்பியுள்ள கேள்வியும் விளக்கமும் இதோ!

ஓட்டுக்காரனே உணர்ந்து பார்!

"நாடு பிரிய வேண்டியதுதான். அதை நாங்கள் ஒப்புக் கொள்ளுகிறோம்; அதற்காகத்தான் சட்டசபைக்கும் பார்லிமெண்டுக்கும் போக வேண்டுமென விரும்புகிறோம்", என்று சொல்லுகிற சட்டசபை "சர்வரோக நிவாரணி"க்காரர்களைப் பார்த்து நான் வணக்கத்தோடு தெரிவித்துக் கொள்ளுவதாவது:—

"சட்டசபைவாதிகளே! நீங்கள் சட்டமன்ற நாற்காலியில் உட்காருவதற்குமுன், உள்ளே நுழைந்த உடன்,

"அ—ஆ. என்னும் நான் சட்டசபையின் ஓர் அங்கத்தினனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறபடியால்,

சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட ,இந்திய அரசியல் அமைப்பில் உண்மையான நம்பிக்கையும்-பக்தியும் கொண்டிருப்பேன்" என்றும், 'நான் இப்போது ஏற்கப் போகும் கடமையை நேர்மையாக நிறைவேற்றுவேன்" என்றும், "கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன். மனப்பூர்வமாய் உறுதி கூறுகிறேன்."

(இந்திய அரசியல் சட்டம், மூன்றாவது தஃப்சி

பிரிவு VII, பக்கம் 226)- என்று சத்தியப்பிரமாணம் செய்து கொடுத்தீர்களே! அந்தச் சட்டப்படி நாடு பிரிவினையை வலியுறுத்த முடியுமா? அதுவே அரசியல் சட்டத்திற்கு விரோதமல்லவா?

"இல்லை; இல்லை! அது பொய் சத்தியம்தான்" என்றாலும்-புளுகினாலும்-அதை (நாடு பிரிவினையை) வலியுறுத்தும் வாய்ப்பும்-வசதியும் பார்லிமெண்டிலோ; சட்டசபையிலோ இருக்கிறதா? தீரயோசித்துப்பாருங்கள்!

டெல்லியில் உள்ள பார்லிமெண்டின் பிரதான சபையான மக்கள் சபையின் மொத்த எண்ணிக்கை 506 பேர்கள்.

(இதில் தேர்தல் மூலம் 500, நியமனம் மூலம் 6)

சென்னை ராஜ்யம் என்று அழைக்கப்படும் நம்தமிழ் நாட்டிற்கு உள்ள பிரதிநிதி 41 பேர்கள். அதாவது 8 சதவிகிதம்பேரே! (நூற்றுக்கு 8 பேர்) நாடு பிரியவேண்டும் என்று சொல்லுபவர்களாகவேஇந்த8சதவிகிதமும்(பார்லிமெண்டு சபையின் விகிதாசாரத்தில்) இருந்தாலும் இவர்களால் என்ன செய்ய முடியும்? எப்படித் தீர்மானம் கொண்டுபோக முடியும்? சாத்தியக் கூறுகள்உண்டா?

எந்தக் காலத்தில் 41 பேர்களும் ஒரு கட்சிக்காரர்களாகவே போய் உட்காருவது? 'அகில இந்தியா' கட்சிக்காரர்கள் ஒப்புக்கொள்வார்களா, பிரிவினையை? தேர்தலுக்குத்தான் "நேசக்கரத்தை நீட்டலாமேயொழிய இலட்சியத்திற்கு அவர்களை நம்பினால் மோசம்தானே வரும்?

கொக்குத்தலையில் வெண்ணெய் வைத்து கொக்கைப் பிடிக்கப் பார்க்கிறாய் என்றுதானே சொல்லவேண்டும்!

சென்னை மட்டுமல்ல; கேரளம், ஆந்திரம், கன்னடம் ஆகிய நாடுகளைச் சேர்த்தால்கூட

சென்னை	41	(மெம்பர்கள்)
கன்னடம்	26	,,
கேரளம்	18	,,
ஆந்திரம்	43	,,
ஆக	128	பேர்கள்தான்.

இந்த 128 பேரும் சேர்ந்து முட்டினாலும்கூட நாடு பிரிக்க முடியுமா?

தமிழ்நாடு	41
கேரளம்	18
கன்னடம்	26
ஆக	85

ஆனாலும் பிரதம ஆட்சியாளர்களான பண்டித நேரு, பண்டித பந்த் ஆகியோர்களைக்கொண்ட ராஜ்யமான உத்தரப்பிரதேசத்திற்கு மட்டுமே 86 பேர்கள் இருக்கிறார்கள்!

"இந்தியக் கூட்டாட்சி"யின் தலைவிதியை நிர்ண

யிக்கும் ராஜ்யம் என்ற பெயர் எடுத்துள்ள ராஜ்யம் உத்தரப்பிரதேசமாகும்.

பார்லிமெண்டில் நாட்டுப் பிரிவினைக்காரர்களாகிய நீங்கள் எந்தக்காலத்தில் எப்படித் தீர்மானம் கொண்டு போய் மந்திரிகள் கண்ணில் விரலை விடமுடியும்? வாய் வீச்சும், வீரப்பிரதாபமும் வெளியில்தான்; உள்ளே முடியுமா?

இது நடக்குமா?

முயலுக்கு மூன்றுகாலும், மனிதனுக்கு முதுகில் ஒரு கையும் முளைத்தால்கூட சட்டசபை, பார்லிமெண்ட் மூலம், அதுவும் இந்திய அரசியல் சட்டத்தின் கீழ் திராவிடநாடு பிரிவினை நடவாத காரியம் ஆகும்.

இதைப் புரிந்து கொள்ளாமல்—அங்கு செல்லுகிறவர்கள் ஒன்றும் புரியாதவர்களாக இருக்கவேண்டும்; இல்லை புரிந்துகொண்டுதான் பேசுகிறோம், அங்கு செல்ல விரும்புகிறோம் என்றால் 'பித்தலாட்டக்காரர்கள்'—அதாவது அசல் அரசியல் வாதிகள் (typical-Politicians) என்பதையாவது ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.

சட்ட மன்றப் பேச்சு பயன் தருமா?

நாடு பிரிவினையில் அவசரமும் அக்கறையும் உங்களுக்கு இருக்குமானால் உங்கள் 'லட்சியமும் மூச்சும்' அதுவேதான் என்றால் என்ன செய்யவேண்டும்?

சத்தியப்பிரமாணமும், சபாநாயகர் தயவினால் சண்டப்பிரசண்டமும் செய்துவிட்டால் போதுமா? நாடு பிரிந்துவிடுமா?

கிளர்ச்சி! கிளர்ச்சி! கிளர்ச்சியே தேவை

கிளர்ச்சி என்ற வெடி மருந்து வேட்டினால்தானே

யூனியன் ஆட்சி என்ற பாறையைப் பிளக்கமுடியும்?

எனவே, அருமை சட்டசபை வாதிகளே! 'நாடு பிரிவினை வேண்டியதுதான்' என்று பறைசாற்றிடும் தோழர்களே! உங்கள் நேர்மை, நாணயத்தை கொள்கைப் பிடிப்பைக் காட்ட இதுவே நல்ல தருணம்.

தீப்பந்தம், யூனியன் தேசப்படம் தயாரியுங்கள்

தீப்பந்தமும் இந்திய தேசப்படத்தையும் எடுத்துக் கொண்டு எங்களோடு சேர்ந்துவர வெட்கப்பட்டால்-தயங்கினால் நீங்களே உங்கள் வீட்டுவாசலின் முன் பாவது தமிழ்நாடு நீங்கலாக இந்திய யூனியன் தேசப் படத்தைக் கொளுத்துங்கள்! "எங்கள் இலட்சியம் திராவிடநாடு" என்று சொல்லுபவர்கள் உண்மையும் நாணயமும் உடையவர்களானால் திராவிட நாட்டை நீக்கியாவது கொளுத்துவது யோக்கியமான காரிய மாகும்.

நாட்டுக்கு ஆற்றவேண்டிய நற்கடமை

அப்படிக்குமில்லாமல் இப்போது தங்களது தாய்நாட் டுக்கு ஆற்றவேண்டிய இந்த இன்றியமையாத கடமையி னின்று தவறுவார்களானால் அப்படிப்பட்டவர்களை வருங்கால தமிழர் சமுதாயம் என்ன சொல்லும் என் பதை ஒவ்வொரு தமிழ் மகனும் நல்லவண்ணம் யோசித் துப்பார்க்க வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஜூன் 5ந் தேதி வீண் (வெத்து) நாளல்ல; உரி மைப் போராட்ட உணர்ச்சியைக் காட்டிக்கொள்ள வேண்டிய நாள்; தமிழனது மானஉணர்ச்சியைப் பரி சோதனை செய்யும் நாள்.

போர்க்கொடி உயர்த்தப்பட்டுவிட்டது!

போர்ச்சங்கு ஊதி போர்ப்பறை கொட்டியாகி விட்டது!

அணிவகுத்து நிற்கத் தயாராகிவிட்டீர்களா? இதற்கு நாளது வரையில் பதில் உண்டா?

தேர்தல் அறிக்கையில் திராவிடம் இடம் பெறாதது ஏன்

திராவிட நாட்டு விடுதலைதான் எங்கள் இதய கீதம் என்று கூறுபவர்கள் தங்கள் கட்சியின் 'தேர்தல் அறிக்கையில்பூதக்கண்ணாடிவைத்துத்தேடினால்கூடதிராவிட நாடு இல்லையே? இது ஏன்? என்று நாம் மட்டும் கேட்கவில்லையே. பம்பாயிலிருந்து வெளிவரும் 'கரண்ட' இங்கிலீஷ் வார ஏடு கேட்டது. சட்டசபையில் திரு. சி. சுப்ரமணியம் (நிதி அமைச்சர்) அவர்கள் கேட்டார். தேர்தல் அறிக்கையில் ஏன் "இன்பத்திராவிடம்" இடம் பெறவில்லை என்ற மர்மத் திரையை தற்போது திரு. ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் வெளிப்படுத்திக்கொண்டு வருகிறாரே, அதற்கு நேர்மையான பதில் கிடைத்திருக்கிறதா?

தி. மு. கழகத்தின் அரசியல் ஞான சூன்யம்

திருச்சியில் நடைபெற்ற அவர்களது மாநில மாநாட்டில் திராவிட நாட்டுப் பிரிவினை குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தான் அவர்களுக்கே உரித்தான அரசியல் ஞானசூன்யத்தன்மைகளின் அப்பட்டமான எடுத்துக்காட்டாகும். அந்த தீர்மானம் இதோ:—படியுங்கள், ஒரு முறை அல்ல, பலமுறை.

"தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்னாடகம், மொழி வழி பிரிந்து இனவழி ஒன்றுபட்டு, பிரிந்து போகும் சுய நிர்ணய உரிமையுடன் கூடிய திராவிட சமதர்ம குடியரசுக் கூட்டாட்சியை ஜனநாயக முறையில் அடைதல் வேண்டும் என்று எல்லா மாநாடுகளிலும் வற்புறுத்தி வந்துள்ள நமது கழகத்தின் குறிக்கோளை மீண்டும்

இம் மாநில மாநாடு வலியுறுத்துவதுடன் இந்திய அரசிய லார் இனியாவது இதற்கு ஆவன செய்யவேண்டும் என்று இம் மாநாடு நினைவூட்டுகிறது."

எவ்வளவு வேடிக்கையான விந்தையான, தீர்மானம் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கூட்டாட்சியை ஜனநாயக முறையில் அடைதல் வேண்டுமாம்! ஜனநாயக முறையில் நாட்டைப் பிரிப்ப தற்கு எங்காவது இடம் உள்ளதா? பெரும்பான்மையின ராகிய மற்ற நாட்டவர் அனுமதியைப் பொறுத்தது தானே 'ஜனநாயக' முறையின் தத்துவம்?

இந்திய அரசியலார் இதற்கு ஆவன செய்ய வேண்டு மாம்! இந்திய அரசியலார் யார்? இந்திய அரசியல் பிரி வினைக்கு இடம் தருகிறதா?

"India that is Bharat shall be a Union ofStates" Article 1. இந்தியா, அதாவது பாரதம் பல ராஜ்யங்க ளைக் கொண்ட ஒரு யூனியனாகவே இருந்து வரும். **Shall** என்ற இங்கிலீஷ் வார்த்தை மூலம் கட்டாயத் தன்மை எவ்வளவு வற்புறுத்தப்படுகிறது என்பது சாதா ரண இங்கிலீஷ் அறிவுள்ளவர்களுக்குக் கூடத் தெரி யுமே! பின் ஏன் இந்த வித்தகர்களுக்கு விளங்கவில்லை? பிரிவினை முழக்கத்திற்கு ஆதரவாக **இந்திய அரசிய லார்** என்றாவது இருந்து வந்திருக்கிறார்களா? இது கசாப்புக்கடைக்காரனை நோக்கி ஆடுகள் ஜீவகாருண்ய நீதி கேட்பது போன்ற செயல் அல்லவா?

இந்த தீர்மானத்திலே இருக்கும் இன்னொரு விஷ யத்தையும் கவனிக்க வேண்டும். திராவிட நாடு அமைய ஆவன செய்யவேண்டுமென்று இந்திய அரசியலாருக்கு **நினைவுதான்** ஊட்டுகிறார்கள்; ஆவன செய்யுமாறு வற்புறுத்துகிறோம் என்று சற்று அழுத்தந் திருத்தமாக,

ஆணித்தரமாக கூறுவதற்குக்கூட தென்பும், திராணியும் இல்லை.

இந்திய அரசியலார் இவர்களது திராவிட நாடு உச்சாடனத்தைக் கேட்டு கசிந்து உருகிக் கண்ணீர் மல்க, அவர்களே ஆவன செய்வார்கள் என்ற இவர் களது நம்பிக்கை நட்சத்திரம் எத்தகையது என்பதைக் கண்டுகொள்ள யாரால் தான் முடியாது!

இது போல நாளுக்கொரு பாஷ்யங்கள் கூறுகிற உவமைதான் இவர்களது திராவிட நாடு பற்றிய விசித் திரக் கருத்துக்களுக்குப் பொருத்தமானது. அதாவது பைத்தியக்காரனுக்குக் கள் ஊற்றியது போல் என்பார் கள். அவன் முன்பே பைத்தியக்காரன்; அவனுக்கு அதுவும் போதாது என்று கள்ளும் ஊற்றி விட்டால்...? அந்த நிலைக்கு ஆளாகி விட்டனர், திராவிட நாட்டு பிரிவினை கோரும் தோழர்கள். இலட்சிய விளக்கம், கேட்பதற்கே அருவருப்பான வகை யில் அல்லவா தரப்படுகிறது? உதாரணத்திற்கு 'கலைஞர்' மதுரையில் பேசும்போது அளித்த லட்சிய விளக்கம் இதோ!

நாளையத் திருமணம் நிச்சயிக்கப்பட்ட இளை ஞன் ஒருவன் திருமணத்திற்கு முதல்நாள் காணும் இன்பக்கனவுகளைப் போன்றதுதான் திராவிட நாட்டுப் பிரிவினை"

இதை கம்யூனிஸ்ட் ஏடான 'ஜனசக்தி' தனது 30-9-56 இதழில் 'இது இவர்கள் லட்சிய விளக்கம்' என்ற தலைப்பில் சுட்டிக்காட்டியது. இலட்சியவிளக்க மேதாவிலாசங்களின் நிலை, பாவம்! இவ்வளவு கீழாகவா போகவேண்டும்?

சுயமரியாதை சமதர்மத்துக்கே

"நான் நீண்ட காலமாகவே சுயமரியாதை, சமதர்மப் பிரசாரம் செய்து வருகிறேன். சமூக வாழ்விலும் பொருளாதாரத்திலும் மக்கள் யாவரும் சமத்துவமாய் வாழவேண்டும் என்பதே அப் பிரசாரத்தின் முக்கியத்துவமாகும். பொருளாதாரத்திலும் அரசியல் துறையிலும் வேலை செய்யாமல் சமூக முற்போக்கு எப்படி ஏற்படும்? இந்த இரண்டுமே நமது சுயமரியாதை இயக்கத்துக்குத் தேவையாகும்"

—பெரியார்